செ.வெ.எண். 398/2016 நாள். 24/06/2016

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(திருநெல்வேலி) லிமிடெட்., நாகர்கோவில் மண்டலம்.

செய்தி குறிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், குலசேகரம், கருங்கல் மற்றும் களியக்காவிளை ஆகிய பகுதிகளில் மினி பேருந்துகள் மற்றும் Maxi-Cab வேன்கள் விதிமுறைகளை மீறி அனுமதிக்கப்படாத தடங்களில் அரசு போக்குவரத்து கழக பேருந்துகளுக்கு இணையாக பயணிகளை ஏற்றியும், இறக்கியும், போக்குவரத்துக்கு இடையூறாகவும் இயக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக போக்குவரத்து கழகத்திற்கு பெரிதும் வருவாய் இழப்பு ஏற்பட்டிருந்தது. தற்சமயம் இரண்டு நாட்களாக காவல்துறை ஆய்வாளர், மார்த்தாண்டம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர், மார்த்தாண்டம் ஆகியோர் மூலம் அனுமதிக்கப்படாத தடத்தில் இயங்கி வந்த மினி பேருந்துகள் மற்றும் Maxi-Cab வேன்களை மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்குள் வராமல் தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுத்தனர். மேலும் அனுமதிக்கப்பட்ட தடங்களில் மட்டும் மினி பேருந்துகளை இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் அரசு போக்குவரத்து கழகத்திற்கு வருவாய் அதிகரித்துள்ளது. மேலும் எப்போதும் போக்குவரத்து நெருக்கடி மிகவும் அதிகமாக காணப்படும் மார்த்தாண்டம் சந்திப்பு மற்றும் பேருந்து நிலையம் தற்சமயம் மிகவும் போக்குவரத்து நெருக்கடி இல்லாமல் இருந்து வருகிறது.

P. Thiruvambalam Pillai
GM
TNSTC Ltd

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்